# சுதந்திரன்
SUTANTIRAN

வள்ளுவர் ஆண்டு 2010
மார்கழி 11
ஸபர் 6
புதன் (26-12-1979)
நிறுவியது 1947
புத்தகம் 33
இதழ் 59
விலை சதம் 50


## நாம் புலிகள் தான் ஆனால் நீங்கள்....?

திரு, அமிர்தலிங்கம்:— (பாணந்துறை எம்பி, நெவில் பெர்ணண்டோவைப்பார்த்து) ''நீர் ஏதாவது கூறவிரும்பினல், அதனைத் தெளிவாகவும் கேட்கக் கூடிய முறையிலும், கூறக் கற்றுக்கொள்ளும், அதுவும் இச்சபையில் எப்படிக் குறுக்கிட செய்ய வேண்டும் என்பதையும் நீர் கட்டாயம் தெரிந்து கொள்ள வேண்டும்.

நெவில் பெர்ணண்டோ:— ஏன் உமக்குக் காது செவிடா?

திரு. அமிர்தலிங்கம்;— எனக்குக்காது செவிடுஅல்ல; ஆனல் நீர்தான் ஊமையைப்போல் பேச முடியாது தவிக்கிறீர்.

நெவில் பெர்ணண்டோ.— நீங்கள் வெளிநாடுகளில் இலங்கைக்கு எதிராகப் பிரசாரம் செய்கிறீர்கள்,

எம், சிவா: நிச்சயமாகச் செய்வோம்: அப்படி செய்வதற்கு எமக்கு உரிமையுண்டு:

நெவில் பெர்ணண்டோ;— நீங்கள் புலிகளாக இருக்கலாம்—அதற்காக நான் பயப்படப்போவதில்லை.

அமிர்தலிங்கம்;— ஆம் நான் புலிதான், எம்மைப் புலிகள் என்பதால் நாம் பெருமைப்படுகிருேம், நீர் புழு, கழுதை''

—பாராளுமன்றத்தில் 20,12,79

# மற்ருேர் இன சங்காரத்துக்கு 'மாத்ருபூமி' தூபமிடுகிறதா?

சிங்கள மொழியில் அச்சிடப்பட்டு சிங்கள மக்கள் மத்தியிலே விற்பனைசெய்யப்பட்ட 'மாத்ருபூமி' நவம்பர் 1979 இதழில் தமிழ் மக்களுக்கெதிராக சிங்கள மக்களைத் தூண்டிவிடக்கூடிய பல ஆதாரமற்ற பொய்ச் செய்திகள் இடம்பெற்றுள்ளன. இச்செய்திகள் சிங்களவரிடையே பரவ விடாது 'மாத்ருபூமி' மீது கொழும்பிலுள்ள தணிக்கை அதிகாரிகளோ பத்திரிகைப் பேரவையினரோ நடவடிக்கையெடுக்காது அப்பத்திரிகைச் செய்திகள் சிங்களமக்களிடையே பரவுவதற்கு அனுமதித்திருக்கின்றனர். சிங்கள மக்களிடையே தம்மைப்பற்றி எத்துணை தூரம் பாரதூரமான பொய்ப் பிரசாரம் செய்யப்பட்டு இனத்துவேஷம் மூட்டப்பட்டுவருகிறதென்பதை தமிழ் மக்களுக்கு நாம் அறியச்செய்வதால், தமிழ் மக்களிடையே சிங்களத்துவேஷம் பரவுவதற்கு கிஞ்சிற்றும் இடமில்லை. எனவேதான் மாத்ருபூமியின் பொய்களை இங்கு அம்பலப்படுத்தவும் அரசின் கண்களுக்கு அவற்றைக் கொண்டுவரவும் அதிலேஇடம்பெற்ற மேலும்சில செய்திகளை அப்படியே தமிழில் இங்கு தருகிருேம்.


—4-ம் பக்கம் பார்க்க

## மூதூர் தங்கத்துரை மீது அபாண்டப் பழி!

## ஈழவேந்தன் விடுதலை!

தமிழர் விடுதலைக்கூட்டணியின் கொழும்புக்கிளைத் தலைவரும், கூட்டணியின் மத்திய செயற்குழு உறுப்பினருமான திரு. ஈழவேந்தன் 85 நாட்கள் தடுப்புக் காவலின்பின்னர் 21.1279ல் விடுதலை செய்யப்பட்டார்.

28.9.79ல் கொழும்பில் இலங்கை மத்திய வங்கி வாசலில் வைத்து சி.ஐ.டி. யினரால் கைது செய்யப்பட்ட திரு. ஈழவேந்தன் கடந்த 85 நாட்களாகயாழ் அரசாங்க மாளிகையிலும் விளக்கமறியற் சாலையிலும் பயங்கரவாதத்தடுப்பு (தற்காலிக) ஏற்பாடுகள் சட்டத்தின்கீழ் தடுப்புக்காவலில் வைக்கப்பட்டிருந்தார்.



விடுதலை செய்யப்பட்ட திரு. ஈழவேந்தனை சட்டத்தரணி திரு. நவரத்தினம் (கரிகாலன்) சுதந்திரன் ஆசிரியர் கோவைமகேசன், த, வி.கூ. நிர்வாகச் செயலாளர் தே.ப. அகஸ்தியர் ஆகியோர் வரவேற்றனர், யாழ்பதில் முதல்வர் திரு. சேவியரும் வாழ்த்துத் தந்தி அனுப்பினர்,

அலகாபாத்தில் நடைபெற்ற அகிலஉலக இந்து மாநாட்டில்கலந்துகொண்ட திரு. ஈழவேந்தன் இலங்கையில் இந்துமதம் திட்டமிட்டு அழிக்கப்படுவது பற்றிஅங்கு உரையாற்றியதும், அந்த உரை சென்னை இந்துப்பத்திரிகையில் வெளிவந்ததும், அதைத்தொடர்ந்துஈழவேந்தன் இலங்கைதிரும்பியதும், மத்திய வங்கி வேலையிலிருந்து அவர் இடைநிறுத்தம் செய்யப்பட்டதும் தெரிந்ததே. இதன்பின் திரு. ஈழவேந்தன் சி.ஐ.டி யினரால் கைது செய்யப்பட்டார்.

சிறையிலிருந்து வெளியே வந்தபின்னரும், சோர்வின்றி உற்சாகமாகக்கணப்படும் திரு. ஈழவேந்தன், தாம் தொடர்ந்தும் தந்தை செல்வா காட்டிச் சென்ற அஹிம்சை வழியில் தமிழினத்தின் இலட்சியத்துக்காக உழைக்க உறுதிக் கொண்டுள்ளதாகவும் சிறைவாழ்வினல் தமதுமன உறுதி மேலும் பலப்பட்டுள்ளதாக வும் தெரிவித்தார்.

## யூ.என்.பி. செல்வாக்கு வீழ்ச்சி!

யூ,என்,பியின் செல்வாக்குத் தெற்கில் வீழ்ச்சியடைந்து வருவதையே காலி இடைத்தேர்தல்முடிவுஎடுத்துக்காட்டியுள்ளது, 1977 பொதுத்தேர்தலில் சுயேச்சையாகப் போட்டியிட்ட திரு தகநாயக்காவும், யூ; என்.பி,சார்பில் போட்டியிட்டு வெற்றிபெற்ற அல்பேர்ட் சில்வாவும் சேர்ந்து மொத்தமாக பெற்றவாக்குகளின் தொகை 26,713,இப்போதுநடைபெற்ற இடைத்தேர்தலின்யூ,என்பி;சார்பில் போட்டியிட்ட தகநாயக்காவுக்கு கிடைத்த மொத்த வாக்குகளின் தொகை 22,377. எனவே 4336 வாக்குகள் யூ.என்.பிக்கும் தகநாயகாவுக்கும் இந்த இடைத்தேர்தலில் குறைந்துள்ளது.

### இரண்டு வருட யூ- என். பி. ஆட்சியில்

## புகையிரதத் திணைக்களத்தில் வேலை வழங்கப்பட்டோரின் மொத்தத் தொகை 492

### சிங்களவர் 472, தமிழர் 12, முஸ்லிம் 8

யூ.என்.பி. அரசாங்கம் பதவிக்குவந்த 27,7 1977ல் இருந்து 31.10.79 வரை புகையிரத நிலைய அதிபர்களாகவோ உப அதிபர்களாகவோ. நியமிக்கப்பட்டவர்களின் மொத்தத் தொகை—195.

இவர்களில் சிங்களவர்— 181 தமிழர்—8, முஸ்லிம்—6,

புகையிரத எழுதுவினைஞர்களாக நியமிக்கப்பட்டோர்களின் மொத்தத் தொகை—214;

இவர்களில் சிங்களவர்—209 தமிழர்—3 முஸ்லிம் —2.

புகையிரதப் பாதுகாவலர்களாக நியமிக்கப்பட்டோரின் மொத்தத் தொகை—83.

இவர்களில் தமிழர் ஒருவர் மட்டுமே- ஏனைய 82பேரும் சிங்களவர்கள் முஸ்லிம் ஒருவரும் இல்லை,

—காவலூர் பா.உ. பண்டிதர்இரத்தினத்தின் கேள்விக்கு பிரதிபோக்குவரத்து அமைச்சர் எச். குலரத்தின பாராளுமன்றத்தில் 20,12.79ல் அளித்த பதிலிலிருந்து மேற்படி விபரம் தெரிய வந்துள்ளது.

# வடபிராந்திய போக்குவரத்துச் சபைக்கு தலைமைதாங்க தமிழனுக்குத் தகுதியில்லையா?

## சிறப்புடன் பணியாற்றிய அமரசிங்கத்துக்கு சீட்டுக் கிழிக்கப்பட்டதுஏன்?

### பாராளுமன்றத்தில் எதிர்க்கட்சித் தலைவர் கேள்வி!

கௌரவ போக்குவரத்து அமைச்சர் அவர்கள் பொறுப்பேற்றபின், இலங்கைப்போக்குவரத்து சபையைப் பன்முகப்படுத்தி போக்குவரத்துச் சபைகளை அமைத்து ஒரு நல்ல பணியைச் செய்தார். ஒருபோக்குவரத்துசபையாகஇருந்தது ஒன்பது போக்குவரத்து சபைகளாக அமைக்கப்பட்டன.

போக்குவரத்து சபையைப் பன்முகப்படுத்துவதன் முக்கிய நோக்கம் அந்தந்தப் பகுதி மக்களின் தேவைகளை அறிந்து பணிபுரியக்கூடிய வகையிலே இப்பிராந்திய போக்குவரத்து சபைகள்அமைய வேண்டும் என்பதுதான். இந்தக் கண்ணோட்டத்தில் பார்க்கும், பொழுதுவடக்குகிழக்கு பிராந்தியங்களின் போக்குவரத்து சபைகள் அந்தந்தப் பகுதி மக்களின்தேவைகளை, அவர்களுடைய அபிலாஷைகளை நிறைவேற்றக் கூடியனவாக இருக்க வேண்டும்.

இதை அறிந்துதான் வட பிராந்திய போக்குவரத்து சபைக்கு அந்தப் பகுதியைச் சேர்ந்த திரு. அமரசிங்கம் அவர்களைத் தலைவராகக் கொண்ட ஓர் இயக்குநர் சபையை அமைச்சர் நியமித்தார் திரு. அமரசிங்கம் அவர்களின் நிர்வாகத்தில் வடபிராந்திய போக்குவரத்து சபைசிறப்புறநடைபெற்றது; சிறந்த சேவை ஆற்றியது; மக்களுடைய பாராட்டைப் பெற்றது; ஊழியர்களுடைய பாராட்டைப் பெற்றது, அரசாங்கத்துக்கும் போக்குவரத்து சபைக்கும் ஆதாயத்தைத் தேடிக் கொடுத்தது.

கொள்கை அடிப்படையில் நான் அமைச்சர் அவர்களை ஒன்று கேட்க விரும்புகிறேன்; சிறந்த சேவையாற்றிய ஒருவரைப் பதவியிலிருந்து விலகுமாறு நீங்கள் வற்புறுத்தியது சரியா? அந்த வற்புறுத்தல் ஏன் ஏற்பட்டது என்பதையும் நான் அறிவேன். இதையொட்டி மாண்புமிகு ஜனாதிபதிக்கும் நான் எனது ஆட்சேபனையைத்தெரிவித்திருக்கிறேன்-

ஒன்பதுபிராந்தியபோக்குவரத்துசபைகளில்ஒன்றிலாவதுதலைமை தாங்கஒருதமிழனுக்கு இந்நாட்டில் உரிமையில்லையா? தகுதியுள்ள ஒரு தமிழனாவது இந்நாட்டில் கிடையாதா? ஏன் இந்தஅநியாயத்தை ஒரு தமிழ்பேசும் அமைச்சருடைய அமைச்சில் நடக்கவிட வேண்டும் என்று நான்அவரைக்கேட்க விரும்புகிறேன்.

இந்நாட்டிலே ஒன்பது பிராந்திய போக்கு வரத்து சபைகள் இருக்கின்றன. அவற்றிலே இரண்டு பிராந்தியங்கள் தமிழ் பேசும்மக்களைப் பெரும்பான்மையாகக்கொண்ட பிராந்தியங்களாகும்.அந்தப் பிராந்தியங்களில்கூட தமிழ் தெரிந்த தலைவர்களில் நிர்வாகத்தில் போக்குவரத்து சபைகள் இயக்கக்கூடாதா: அங்குள்ளஊழியர்களின் தேவைகளை அறியக்கூடியதாகஅந்த மக்களின் அபிலாஷைகளை உணரக்கூடியதாக தமிழ் தெரிந்த ஒரு தலைவரை நியமிப்பதற்கு ஏன் முடியாது? ஏன் நியமிக்கக்கூடாது? நான் மீண்டும் கூறுகிறேன் அமைச்சர் அவர்கள் சில சூழ்நிலைகளின் காரணமாக இந்நிலைக்குக் கொண்டுவரப்பட்டார் என்பதை நானறிவேன்.

இன்னும்ஒன்றைநான்கூற வேண்டும்? போக்குவரத்து சபைகள் கட்சிக் கண்ணோட்டத்தோடு நடத்தப்பட வேண்டிய நிறுவனங்கள் அல்ல. பஸ் வண்டிகளில்பிரயாணம் செய்பவர்கள்எந்த ஒரு கட்சியையும் சேர்ந்தவர்களல்ல அங்கு வேலை செய்யும் ஊழியர்கள் கூட பல்வேறு கட்சிகளைச் சேர்ந்தவர்களாக இருக்கலாம். ஆனால் அவர்கள் மக்களுக்குச் சரியான முறையில் சேவை செய்பவர்களாக இருந்தால் அங்கே ஊழியர் புரியும் உரிமை அவர்களுக்குண்டு.

சமீப காலத்திலே ஆளும் கட்சித் தொழிற் சங்கம் என்ற ஒன்றை அமைத்து அதனுடைய தலையீட்டால் தான் இந்த வேலைகள் நடந்திருக்கின்றன என்பதை நான் இங்கே தெளிவாக உறுதியாகக் கூற விரும்புகிறேன்- வட பிராந்திய முகாமையாளரால் ஒழுங்கு நடவடிக்கைக்கு ஆளாக்கப்பட்ட சில ஊழியர்கள் கடைசி நேரத்தில் தாங்கள் ஆளும் கட்சித் தொழிற்சங்கத்தைச் சேர்ந்தவர்கள் என்று காட்டிக் கொண்டு அங்கு இருந்துகொழும்புக்கு வந்து இங்கேயுள்ள சிலரைப் பிடித்து அவர்களை கொண்டுஅரசாங்கத்தையே நெருக்கியிருந்த மாற்றம் செய்யப்பட்டிருக்கிறது,

தமிழ் மக்களுக்கு விரோதமான காரிய மென்றால்முன்னின்று செய்யக்கூடிய ஒரு அமைச்சர் இந்த அமைச்சரவையில் இருப்பதையும் நாங்கள் வேதனையோடு கவனித்துக் கொண்டுதான் இருக்கிறோம். உண்மையில் போக்குவரத்து சபையைச் சீராக நடத்துவதில் நாங்கள் பூரண ஒத்துழைப்பை அமைச்சர்களுக்குக் கொடுக்க எந்த நேரமும் ஆயத்தமாக இருக்கிறோம். ஆனால் எங்களோடு ஒத்துழைக்கிறார்கள் என்பதற்காக ஊழியர்களையோ, மாற்றுவதாக, இருந்தால் நிச்சயமாகஅந்த ஒத்துழைப்பை யாருமே கொடுக்கமுடியாது. இழைக்கப்பட்ட இந்த அநீதிக்கு நிவாரணம் வழங்க வேண்டும் என்பதைநான் இந்நாட்டுத் தமிழினத்தின் சார்பில் அமைச்சர் அவர்களுக்கு வலியுறுத்திக் கூறக் கடமைப் பட்டிருக்கிறேன்- ஊழியர்களுக்குப் பதவி உயர்வு வழங்குவதில் அவர்கள்சார்ந்திருக்கிற தொழிற் சங்கம் எந்தக் கட்சியோடு சேர்ந்தஎன்பதைக் கருத்திற் கொண்டு பதவி உயர்வு வழங்கக் கூடாது,

வடபிராந்திய முன்னைய தலைவருக்குஎதிராகதொழிற் சங்கவாதிகள் என்று தம்மை அழைத்துக் கொள்வோர் சிலர் மேலிடத்துக்கு முறையீடுசெய்ய வேண்டிய காரணம் ஏன் ஏற்பட்டது? அவர் எல்லோருக்கும் நீதியாக நடந்த காரணத்தால் இன்று ஐக்கிய தேசியக் கட்சித் தொழிற் சங்கத்திலே இருப்பவர்கள் என்று கூறுவோர் எப்பொழுது அதிலே சேர்ந்தார்கள் என்பதையும் இந்த அரசாங்கம் பதவிக்கு வருமுன் அவர்கள் எங்கே இருந்தார்கள் என்பதையும் அமைச்சர் கொஞ்சம் கவனித்துப்பார்க்க வேண்டும்.

உண்மையில்இன்று வட பிராந்தியத்தில் போக்குவரத்து சபை அலுவலகத்தில் ஒரு தொழிற்சங்கப் பிரதிநிதியாக அங்கீகரிக்கப்பட்டு அங்கே ஒரு காரியாலயம் வழங்கப்பட்டுமுழுநேரமாக தொழிற்சங்க வேலை செய்கிறேன் என்று இருப்பவர் எப்படி நியமனம் பெற்றார் என்பதை அமைச்சர் ஆராய்ந்து பார்ப்பாராக இருந்தால் அவர் ஒருஇடதுசாரிக் கட்சிச் சார்பிலே அந்த நியமனத்தைப் பெற்று அந்த இடதுசாரிக் கட்சி உறுப்பினராகஇருந்தவர் என்பதை அறியக்கூடியதாக இருக்கும்.

இன்று வசதிக்கேற்ற விதமாக சிவப்புச் சட்டையைக் கழற்றிவிட்டுபச்சை சட்டையைப்போட்டவுடன் அவருடைய சொல்லின் பேரில் நேர்மையாக சிறப்பாக பணிபுரிபவர்களைப்பழிவாங்கும் நிலைமை இருக்கக் கூடாது என்பதைத்தான் நான் இங்கே சுட்டிக்காட்ட விரும்புகிறேன் நீங்கள் போக்குவரத்துச் சபையைச் சிறப்புற நடத்துவதாக இருந்தால் நேர்மைக்கு மதிப்பளிக்வேண்டும், சிறந்த சேவைக்கு மதிப்பளிக்க வேண்டும் என்பதை நான் மீண்டும் வற்புறுத்திக் கூற விரும்புகிறேன். இந்த ஊழியர்களுடைய பதவி உயர்வு விஷயத்திலே பாரபட்சம் காட்டாது சிறந்த சேவையாளர்களுக்கு பதவி உயர்வு வழங்கப்பட வேண்டும்:

இன்று வட பிராந்திய போக்குவரத்து சபையில் பொது முகாமையாளராக இருப்பவர் திரு.கே.பி. எல். பெரேரா அவர்கள். அவரையும் கொண்ட ஒரு விசாரணைச் சபை குற்றவாளியாகக் கண்டு மன்னாருக்குமாற்றப்பட்ட ஒரு ஊழியரை இன்று யாழ்ப்பாணத்திலே பணிபுரிய விட்டது மாத்திரமல்ல அவருக்குப் பதவிஉயர்வும் வழங்கப்பட்டிருப்பதாக நான் அறிகிறேன்.

—4-ம் பக்கம் பார்க்க

# மொத்த விஸ்தீரணம் 108.7 ஏக்கர் வாழும் மக்கள் தொகையே ஆயிரம்! ஆயினும் வத்திக்கான் ஒரு தனிநாடு

'வத்திக்கான்' என்று உலகத்தவரால் அழைக்கப்படும் உலகக் கத்தோலிக்க மதத்தவரின் தலைமை நகரமான இதை, இந்நாட்டுக்குரியவர்களான இத்தாலியர்கள் 'வத்திகான்' என்றே ஒலிக்கின்றனர்.

இந்நகர் இத்தாலி நாட்டின் தலைநகரான ரோம் நகரின் ஒரு சிறிய பகுதியே ஆகும். ஆனால் சுதந்திர நாடு. அனைத்து அதிகாரங்களும் கொண்ட யாருடைய மேலதிகாரத்திற்கும் உட்படாத தனிநாடு.

இன்றுவரை உலகத்திலேயே சின்னஞ் சிறியநாடு இதுதான். நாளை இதைவிடச் சின்னஞ் சிறிய சுதந்திர நாடுகள் தோன்றினும் தோன்றலாம்.

ஆம்; இந்த வத்திக்கான் தமிழ் நாட்டிலுள்ள ஒரு சிறு பல்கலைக்கழகம் எவ்வளவு பரப்பளவில் அடங்கி இருக்குமோ, அந்த அளவுக்குக்கூட இல்லை. இதன் மொத்தப்பரப்பளவு எவ்வளவு தெரியுமா? 108.7 ஏக்கர்கள் தான்.

இதன் தலைவர் போப். இவர்தான் உலகம் முழுவதும் பரவியுள்ள கோடிக்கணக்கான கத்தோலிக்க கிறிஸ்தவர்களின் சமயத் தலைவர். வத்திக்கான் ஆட்சி இவருடைய அதிகாரத்தின்படிதான் நடக்கிறது.

இத்தாலி சிதறிக் கிடந்த போது போப்பின் மாகாணங்கள் (Popal States) என்ற பெயரில் பெரிய பெரிய மாநிலங்களை போப் ஆண்டு வந்தார். முழு இத்தாலியும் ஒன்றுபட்டு ஒரு நாடானதும் அரசதிகாரங்கள் சுக்குநூருக்கப்பட்டு வத்திக்கானோடு நின்றுவிட்டது.

1929ல்நடந்த லாட்டிரன் உடன்பாட்டின்படி போப்பின் ஆளுகைக்குட்பட்ட வத்திக்கான்தனிநாடானது. அது முதல் வத்திக்கான் சுதந்திரநாடாகவே இருந்து வருகிறது.

வத்திக்கான் நாட்டின் மக்கள் தொகை எவ்வளவு தெரியுமா? 1960ல் எடுக்கப்பட்ட கணக்கின்படி வெறும் ஆயிரம்பேர்தான்.

35 இலட்சம் தமிழ் மக்கள் நாம் தனிநாடுகேட்கும் பொழுதே "அது தேசத் துரோகம், தேவையற்றது" என்று மோசவாதம் புரிகிறார்கள்! அவர்கள் 1000 பேர் தனிநாடாக வாழுகிறார்களே. அதைத் தேவையற்றது என்று கூற முடியுமா? இத்தாலியும் கூறவில்லை. அவர்களில் எந்தக் கோடரிக் காம்பும் அப்படிக் கருதவில்லை.

மாறாக, இத்தாலியின் தலைநகர் ரோமின் ஒரு பகுதியிலேயே வத்திக்கான் அமைந்திருப்பதால் அதன் தனித்தன்மையைப் பாதுகாப்பதற்காக வத்திக்கானைச் சுற்றி 50அடி உயரப்பெருஞ் சுவர் எழுப்பி இருக்கிறார்கள்.

வத்திக்கான் மக்களில் பெரும்பகுதியினர் போப்பின் கீழ் வேலை பார்ப்பவர்கள்தான். ஆனால் அவர்கள் அடிமைகளல்லர், அனைத்து நாட்டு மக்களுமே பார்த்து வியக்கும்படி வாழும் சுதந்திர மாந்தர்கள்.

இந்த நாட்டினுடைய வருமானம் உலகெங்கிலும் இருந்து வரும் கத்தோலிக்கர்கள் செலுத்தும் காணிக்கையும், வத்திக்கானில் விதிக்கப்படும் வரிகளும் தான்.

உற்பத்திப் பொருள்கள் என்றுஇங்கு எவையும் கிடையாது. எல்லாம் வெளியிலிருந்துதான் வரவேண்டும்.

ஆனால், உலகமே மூக்கின் மேல் விரலை வைக்க வத்திக்கான் தன்னிகரில்லாத் தனிநாடாகத் திகழ்ந்து வருகிறது. அதன் குரலுக்கு அனைத்து நாடுகளிலுமே மரியாதை இருக்கிறது.

வத்திக்கானைப்பற்றி வையக வரலாறு கூறும் பாராட்டுரை என்ன தெரியுமா?

'சிறியநாடு. பெரிய கோவில் வளமான நூலகம் பெரிய பொருட்காட்சிச் சாலை' (Smallest state, largest church, wealtheist library. greatest museum) என்பதாகும்.

ஆம்; ஆயிரம் பேர்தான் என்றாலும் வத்திக்கான் மக்கள் உலகத்தின் முன் சுதந்திர மாந்தர்கள். ஆனால் நாம் இங்கு 35 இலட்சம் தமிழ்மக்கள்? உலகிலோ 10 கோடி தமிழர்கள்!

நாம் கோரும் தமிழ் ஈழத்தின் பரப்பளவு சுமார் 8000 சதுர மைல்கள்.

# பஸ்ஸை மறித்து நடத்துநரிடம் பணம்கொள்ளை சந்தேகநபரை பொலிசார் கைதுசெய்யவிடாமல் காப்பாற்றினர் ஐ. தே. க. அமைப்பாளர்!

## பாராளுமன்றத்தில் அம்பலமாகிய சங்கதி

கம்பஹா தொகுதியின் தற்போதைய உறுப்பினர் எஸ். டி. பண்டாரநாயகாவுடன் போட்டியிட்டுத் தோல்வியடைந்தவரும் கம்பகாவின் ஐக்கிய தேசியக் கட்சி பிரதம அமைப்பாளருமானசந்திரா ஜெயக்கொடி என்பவருடன் சம்பந்தப்பட்ட ஒருவிடயத்தை இங்கு குறிப்பிடவிரும்புகிறேன்.

இந்த ஆண்டு அக்டோபர் மாதம், கொமெய்னி ஸ்டைலில், சவரக்கத்தியுடன் ஒரு மனிதர் பஸ் வண்டிக்குள் ஏறி,பஸ்நடத்துனரிடம் பயமுறுத்திப் பணத்தைக் கேட்டு. பிரயாணிகளையும் பயமுறுத்தி, நடத்துனரிடமிருந்து பணத்தையும் பறித்துக்கொண்டு பாய்ந்தோடி விட்டான்.

பஸ் சாரதி நேராக பஸ்ஸை வெலிவெரியா பொலீஸ் நிலையத்துக்கு ஓட்டிச் சென்று, பொலீசின் உதவியுடன் மீண்டும் சம்பவம் நடந்த பழைய இடத்துக்குச் சென்றுள்ளார். அங்கேசந்தேக நபர் காணப்பட்டார். சந்தேக நபரைப் பொலிசார் கைது செய்யத் தயாரானபோது,யூஎ.ன்.பி.யின் கம்பகா அமைப்பாளர் சந்திராஜெயக்கொடி அந்த இடத்துக்கு,மூன்றுபேருடன் ஒரு காரில் வந்து சேர்ந்தார்.

யூ. என். பி.அமைப்பாளர் பொலீஸ் இன்ஸ்பெக்டரின் கையிலிருந்த இயந்திரத்துப்பாக்கியைப் பிடித்திழுத்ததுடன், சந்தேக நபரை விடுவிக்கப் பெரும்பாடுபட்டார் பொலீஸ் அதிகாரியைஅவர் கேவலமாக திட்டினர்; பயமுறுத்தினர்; தாக்கினர்; அடித்தார். இதன்பின் சந்தேகநபரையும் தமதுகாரில் கூட்டிக்கொண்டு போய்விட்டார்.

இச் சம்பவத்தையிட்டும், கம்பகா ஐ. தே. க. அமைப்பாளர் சந்திராஜெயக்கொடிக்கும் எதிராக இதுவரை என்ன நடவடிக்கையெடுக்கப்பட்டுள்ளது?

இரண்டாவது விஷயம், நான் சென்ற ஆண்டு எழுப்பிய பிரச்சினை. மாவட்ட அமைச்சர் ஒருவரின் நடத்தை பற்றியது அது. குறித்த மாவட்ட அமைச்சர். பொலீஸ் நிலையம் ஒன்றுக்குள் நுழைந்து,பொலிசாரை வெளியே இழுத்துத் தாக்கியதுடன், பொலீசாருக்கு நெருக்கடியான நிலையையும் ஏற்படுத்தினர்: குறித்த மாவட்ட அமைச்சருக்கு எதிராக நடவடிக்கை எடுப்பதற்கு சட்டமா அதிபரின் அறிக்கையை தாம் எதிர்பார்த்துக்கொண்டிருப்பதாக சென்றஆண்டு அமைச்சர் கூறியிருந்தார். ஒரு ஆண்டு முடிந்துவிட்டது, சட்டமா அதிபரின் அறிக்கையின் கதியென்ன? கெக்கிராவை உறுப்பினரான மாவட்ட அமைச்சருக்கு எதிராக என்ன நடவடிக்கை எடுக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது?

—இவ்வாறு 4.12.79இல் பாராளுமன்றத்தில் பேசிய திரு. அனுரா பண்டாரநாயகா பிரதிப் பாதுகாப்பு அமைச்சரிடம் கேட்டார்.

# "சுயநிர்ணய உரிமைக்காக மட்டும் விடுதலைக் கூட்டணி போராடவில்லை! கூட்டணி கோருவது சுதந்திரத் தமிழீழமே!"

### அரசாங்க எழுதுவினைஞர் சங்கத்தின் ஆணித்தரமான அறிவிப்பு

"மலையகத் தமிழ் மக்களின் பிரஜாவுரிமையைப் பறித்து அவர்களை நாடற்றவர்களாக ஆக்க வழிகோலிய "பிரஜா உரிமைச் சட்டம்'' 1948ம் ஆண்டு பாராளுமன்றத்தில் கொண்டுவரப்பட்டமையை எதிர்த்து காங்கிரஸ் கட்சியிலிருந்து பிரிந்து தந்தை செல்வா அமைத்த கட்சிதான் இலங்கைத் தமிழரசுக் கட்சியாகும். மலையகத் தமிழர்கட்காக தமிழரசுக்கட்சி எதையும் செய்யவில்லை என்பவர்கள் நாட்டின் அரசியல் வரலாற்றை நன்கு தெரிந்து வைத்துக்கொண்டு பேச வேண்டும்''

இவ்வாறு சென்ற வார இறுதியில் கொழும்பு. வை. எம். சீ. ஏ. மண்டபத்தில் வண. பிதா போல் கஸ்பஸ் தலைமையில் நடைபெற்ற இனங்களுக்கிடையேயான நீதிக்கும் சமத்துவத்துக்குமான இயக்கத்தின் உத்தியோக பூர்வ அங்குரார்ப்பணக் கூட்டத்தில் பேசுகையில் அரசாங்க எழுதுவினைஞர் சங்க நிதிச்செயலாளர் திரு. சி. இரத்தினவடிவேல் குறிப்பிட்டார்.

வடகிழக்கு மாகாணத்தமிழர்களின் பிரச்சினைகளோடு மட்டும் இவ்வியக்கம் நின்றுவிடக்கூடாதென்றும், தமிழரசுக் கட்சியினுற்கூடப்புறக்கணித்துவிடப்பட்டுள்ள மலையகத்தவரின் பிரச்சினைகளையும் சேர்த்து இயங்க வேண்டுமென்றும் திரு, பாலா தம்பு தமது பேச்சின்போது குறிப்பிட்டமைக்குப் பதிலளிக்கையிலேயே திரு. இரத்தினவடிவேல் மேற்கண்டவாறு கூறினர்:

அவர் தொடர்ந்து பேசுகையில், மலையகத்தமிழரின் உரிமைகள் பறிக்கப்பட்டமை இந்நாட்டின் ஏனைய தமிழரின் உரிமைகள் பறிக்கப்படும் நாள் அண்மித்துவிட்டது என்பதை எடுத்துக்காட்டும் அபாய மணியாக ஒலித்தமையைத் தந்தை செல்வா உணர்ந்தே தமிழரசுக்கட்சியை உருவாக்கினர். அவரின் அன்றைய தீர்க்க. தரிசனம் சரியானதே என்பது இன்று நிரூபணமாகியுள்ளமையை எவரும் மறுக்க இயலாது:

அன்று தந்தை உருவாக்கிய தமிழரசுக் கட்சிதான் இன்று ''தமிழர் விடுதலைக் கூட்டணி'' என்ற பெரு விருட்சமாக வளர்ந்து நிற்கிறது. இங்கு முன்பு பேசியவர்கள் —திரு.பாலா தம்பு உட்பட— தெரிவித்திருந்தமை போன்று த. வி. கூட்டணி சுயநிருணய உரிமைக்காக மட்டும் போராடவில்லை. இன்று அது வேண்டி நிற்பது தனித் 'தமிழ் ஈழமே' இதிலே எவருக்கும் தெளிவின்மை இருக்கக் கூடாது.

இந்நாட்டின் எந்தப்பகுதியில் இருக்கும் தமிழனுவது, அவன் சுதந்திரமாகவும் சமத்துவமாகவும் வாழ வேண்டின் இங்கு எமது தாயகம் மீட்டமைக்கப்பட வேண்டியது அவசியம். இந்நாட்டின் தமிழ் மக்கள் அச்சமின்றி நீதியின் அடிப்படையில் வாழ்வதற்கு 'தமிழ் ஈழம்'' தான் வழி வகுக்கும். இந்நாடு சுதந்திரம் பெற்றதுமுதல் இன்று வரை இங்கு நடைபெற்ற, நடைபெற்றுவரும் சம்பவங்கள் இதனை எமக்குப் பாடமாகப் புகட்டியுள்ளன. எனவே மலையக மக்களானுலும் சரி. வடக்கு கிழக்கு மாகாண மக்களானுலும்சரி அவர்களது பிரச்சினைகளின் தீர்விற்கான ஒரேவழி தமிழ் ஈழமே என்றார்;

அவ்வாறாயின் ஜே. ஆர்.— அமிர் ஒப்பந்தம் ஏற்படக் கூடுமோவென கேட்கப்பட்டபோது. "மலையக மக்கள் மட்டுமல்ல இலங்கைத் தொடர்புள்ள, வெளிநாடுகளில் வாழும் எந்தத் தமிழரும் தமிழ் ஈழத்தில் மிக்க மகிழ்ச்சியுடன்பிரஜைகளாக ஏற்றுக்கொள்ளப்படுவார்கள் என்பது த. வி. கூ. தேர்தல் விஞ்ஞாபனத்திலேயே தெளிவாகக் கூறப்பட்டுள்ளது. எனவே இவ்வாறான ஒப்பந்தத்திற்கு அவசியம் எழாது'' என அவர் மேலும் தெரிவித்தார்.

நாட்டின் பல்வேறு பகுதிகளிலிருந்தும் கூட்டத்திற்கு வருகை தந்திருந்தனர். இயக்கத்தின் யாப்பு வேண்டிய திருத்தங்களுடன் ஏற்றுக் கொள்ளப்பட்டது. இக் கூட்டத்தில் அரசாங்க எழுதுவினைஞர் சங்கத்தின் சார்பில் நிதிச்செயலாளருடன் முன்னாள் துணைத் தலைவர் திரு. சி. சோதிநாதனும் பங்கு பற்றினர்.

இடதுசாரிகள்மட்டும் பங்கேற்கும் இயக்கமாகவன்றி பலதரப்பட்ட கொள்கைகளையுமுடைய பல தரப்பட்ட மக்களையும் இவ்வியக்கத்தில் பங்குபற்றவைப்பது அதன் இலட்சிய ஈடேற்றத்திற்கு அவசியம் என்பதும் கூட்டத்தில் வலியுறுத்தப் பட்டது.

—2-ம் பக்கத் தொடர்

முந்திய தலைவர் பதவி நீக்கம் செய்யப்பட்டிருப்பதற்கு அதுவும் ஒரு காரணம் குற்றம் செய்தால் பதவி உயர்வு வழங்குவதா உங்களுடைய கொள்கை? பிராந்திய போக்குவரத்துச் சபையிலே குற்றம் செய்து நிர்வாகத்தோடு ஒத்துழைக்க மறுத்தவர்களுக்குப் பதவி உயர்வு வழங்கப்போகிறீர்களா? ஒரு சரியான ஆளைப் பிடித்தால் சரியான நிறச் சட்டையைப் போட்டால் அவருக்குப் பதவி உயர்வு என்பதா உங்கள் கொள்கை என அமைச்சரைக் கேட்க விரும்புகிறேன்.

# அநீதிகள் இருக்குமிடத்தில் அமைதி நிலவாது!

பூமியில் சமாதானம் உண்டாகுக இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு எமது மீட்பரின் வருகையை அறிவித்து விடுக்கப்பட்ட மேற்படி செய்தியை நினைவு கூரல் என்றுமில்லாதவாறு இந்தக் காலக் கட்டத்திலே மிகவும் பொருத்தமாக இருக்கின்றது. ஆண்டுதோறும் இறைமகனின்வருகையைக்கொண்டாடுகிறேம். ஆனல் அவர் விட்டுச் சென்ற சமாதானம் எல்லோர் உதட்டளவிலும் தான் இன்றும் இருக்கின்றது. அதனுல்தான் எங்கு பார்த்தாலும் சண்டை, சச்சரவு, அமைதியின்மைநிலவுகின்றன,

இந்த நிலைக்கு அடிப்படைக் காரணம் என்ன? பிறப்புரிமைகள் மறுப்பு, சுரண்டல்; வலிமையை வலிமையற்றசமுதாயத்தை ஒடுக்குதல்தான் தோன்றித்தனமாக வழிநடத்தும் தலைமைப் பதவிகள் மனித உரிமை மீறல்போன்ற அநீதிகள்தான் காரணம்.

அநீதி இருக்குமிடத்தில் சமாதானம் இருக்க முடியாது: அமைதி இருந்தாலும் அது தற்காலிக மாகத்தான் இருக்கமுடியும். அந்த அமைதியே ஒரு நாள் எரிமலை போல் வெடித்து அக்கினிப் பிழம்பைக் கக்குவது உண்டு எனவே நிலையான சமாதானத்துக்கு நீதியும், நியாயமும் நியாயத்தை சகிப்புத் தன்மையுடனும் பொறுமையுடனும் நிலைநாட்டி அனைவர்க்கும் புரிய வைக்கும் ஆற்றலும் தலைவர்களுக்கு அவசியமாகின்றது.

இந்த நிலையிலே இறைமக்களாகிய எமது பங்கு என்ன! வெறுமனே எவரும் சமாதானம். சமாதானம் என்று கூறுவதை விடுத்து சமாதானத்துக்கு இடையூருக இருக்கும் சமுதாய சமூக அநீதிகளைச் சுட்டிக் காட்டி அவற்றை அகற்றுவதற்கு ஆனதைச் செய்ய வேண்டும். உலகில் பலநாடுகளிலும் மனித உரிமைகள் சாசனம் வெறும் ஏட்டுச் சுரைக்காயாகவே இருக்கின்றது. இந்நிலை மாற வேண்டும். மனிதன் தனதுமாண்புடனும், பிறப்புரிமைகளுடனும் சுதந்திரமாக சீவிப்பதற்குவழிவகுக்க வேண்டும்.

இதுவே நல் மனதுள்ள அனைவர்க்கும் விடுக்கப்பட்டுள்ள சவால். இதுதான் நத்தார் எமக்குத்தரும் உண்மையான செய்தி.

இவ்வாறு இலங்கைகிறிஸ்தவ தொழிலாளர் இயக்கத்தின் பொருளாளர் திரு,அ, யேசுதாசன்வெளியிட்டுள்ள நத்தார் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

# தமிழ்ப்பிரதேசங்களில் 1,92,920 ஏக்கர் காணியில்

# 100,386 குடும்பங்கள் அத்துமீறிக் குடியேற்றம்!

## பாரபட்சமின்றிக் காணி வழங்கப்படுமா?

அரசாங்கக் காணிகளில் அத்துமீறிக் குடியேறியுள்ளவர்களுக்கு அக்காணிகளை சொந்தமாக்கப் போவதாக பாராளுமன்றத்தில் காணி, காணி அபிவிருத்தி அமைச்சர் அறிவித்திருக்கிறார். இதன்படி பத்து இலட்சம் ஏக்கர் அரசாங்கக் காணி பகிர்ந்து கொடுபடப்போகிறது.

இந்தப்பத்து இலட்சம் ஏக்கரில் 1 இலட்சத்து 92ஆயிரத்து 920. ஏக்கர் காணிகள் தமிழ் பேசும் மாவட்டங்களுக்குள் அமைந்துள்ளன.

கடந்த 30 ஆண்டு காலமாக மாறிமாறி அரசு கட்டிலேறிய ஆட்சியாளர்கள், ஒருவிஷயத்தில் மிகவும்திட்டமிட்டுசெயற்பட்டு வந்திருக்கின்றனர். அதாவது, தமிழ்ப் பிரதேசங்களிலுள்ள அரசாங்கக்காணிகளில் சிங்களவர்கள் அத்துமீறிக் குடியேறிக் காடு வெட்டி விவசாயம் செய்யும்போது அதைக்கண்டும் காணுமலிருப்பார்கள். சில காலத்துக்குப்பின் அவ்வாறு அத்துமீறிக் குடியேறியோருக்கே அக்காணியை சட்டபூர்வமாக வழங்குவதாக அறிவிப்பார்கள். சிங்கள மக்கள் குடியேறியுள்ள காணிகள் எதுவித பிரச்சினையுமின்றி அவர்களுக்கு சொந்தமாக்கப்பட்டு விடும். அவ்வாறு குடியேறிய தமிழர்களோ சாக்குப் போக்குக் காட்டப்பட்டு காணிகளிலிருந்து வெளியேற்றப்படுவார்கள்,

முந்திய அரசின் காலத்தில் புனேயில் இதுதான் நடைபெற்றது. இப்போது ஐ.தே.க. அரசாங்கமும் குடியேறியவர்களுக்கே காணிகளை சொந்தமாக்கப் போவதாக அறிவித்துள்ளது.

தமிழ் மாவட்டங்களில், யாழ்மாவட்டத்தில் 18,207 ஏக்கர் காணியில் 10,156 குடும்பங்களும்; மன்னர் மாவட்டத்தில் 5337 ஏக்கர் காணியில் 8,074 குடும்பங்களும், வவுனியா மாவட்டத்தில் 52,107ஏக்கர் நிலத்தில் 20,750 குடும்பங்களும் திருகோணமலை மாவட்டத்தில் 56,289 ஏக்கர் நிலத்தில் 28,297 குடுப்பங்களும், அம்பாறை மாவட்டத்தில் 60,980 ஏக்கரில் 33.109 குடும்பங்களும் அத்துமீறிக் குடியேறியுள்ளதாக புள்ளி விபரம் தரப்பட்டுள்ளது.

இவ்வாறு தமிழ் மாவட்டங்களில் அத்துமீறிக் குடியேறியுள்ள ஒரு இலட்சத்து 386 குடும்பங்களில் தமிழ் குடும்பங்கள் எத்தனை. சிங்களக் குடும்பங்கள் எத்தனை முஸ்லிம் குடும்பங்கள் எத்தனை என்றவிபரம் அறிவிக்கப்படவில்லை.

சிங்களக் குடும்பங்களை தமிழ்ப் பிரதேசங்களில் அத்துமீறிக்குடியேற வைத்துவிட்டு, பின்னர் அக்காணிகளை அவர்களுக்குச் சட்டபூர்வமாக்குவதும் ஒருவகை நில ஆக்கிரமிப்பே என்பதை கூட்டணி சுட்டிக் காட்டியுள்ளது.

ஜே. ஆர். அரசாங்கம் அத்துமீறிக் குடியேறியோருக்கு அவற்றைச்சட்டபூர்வமாக வழங்கும்போது, தமிழ் பிரதேசங்களின் இனவீதாசாரத்துக்கு பாதகம் ஏற்படாமலும், இனப்பாரபட்சம் இன்றியும் இப்பிரச்சினையை அணுகுமா என்பதே இன்றைய கேள்வியாகும்;

## நத்தார் புதுவருட வாழ்த்து!

சுதந்திரன் வாசக நேயர்களுக்கு எமது நத்தார் புதுவருடவாழ்த்துக்களைத்தெரிவித்துக் கொள்ளுகிறேம்;

## யாழ்ப்பாண ராஜ்யத்துக்கு இராசதுரையும் இருட்டடிப்பு!

பிராந்திய அபிவிருத்தி அமைச்சர்செல்லையா இராசதுரை. தமது அமைச்சின் கடமைகள் திட்டங்கள் பற்றிய அறிக்கையொன்றை 19.12 79ல் பாராளுமன்றத்தில் தாக்கல் செய்தார். அதில் ஓர் இடத்தில்—

பொலன்னறுவைமன்னர், கோட்டை இராசதானிஆட்சிக்காலங்களிலும் இந்துசமயம்ஆதரவளிக்கப்பெற்றது, சைவக் கோவில் கட்டுவதற்கும் இவற்றைப்பேணுவதற்கு வேண்டிய சொத்து ஆதனங்களை நன்கொடை செய்ததற்கும் பலபௌத்த மன்னர்கள் நிமித்த காரணராய் விளங்கினர்.

என்று கூறப்பட்டிருக்கிறது.

பொலன்னறுவை மன்னரும் கோட்டை இராசதானி ஆட்சியும் சைவ மதவளர்ச்சிக்கு உதவியதாக குறிப்பிடும் அமைச்சர் இராசதுரை யாழ்ப்பாண இராச்சியம் இத்தீவில் நீடித்த காலத்தில் சைவசமயம் வளர்க்கப்பட்டவரலாற்றையும் குறிப்பிடாது அதை இருட்டடிப்பு செய்ததேனே? சங்கிலியன் ஆட்சிக் காலத்திலும், பரராசசேகரன் ஆட்சியிலும் சைவசமய வளர்ச்சிக்கு அளிக்கப்பட்ட பேராதரவு பற்றி குறிப்பிட மறந்ததேன்? திருக்கோணேஸ்வரத்தை கட்டிய மன்னன் குளக்கோட்டனின் பணியை மறந்ததேன்! சோழ மன்னர்களை மறந்ததேன்!

சங்கிலியனுக முன்பு வேடமிட்டு நடித்த அமைச்சர் இராசதுரை யாழ்ப்பாண இராச்சியத்தை நிச்சயம் மறந்திருக்கமுடியாதுயாழ்ப்பாண இராச்சியம் பற்றி அறிக்கையில்எதுவும்குறிப்பிடக்கூடாது என்று அவருக்கு மேலிடத்திலிருந்து கட்டுப்பாடு விதிக்கப்பட்டதோ என்னவோ?

## உதவி மேயரின் தந்தி

வேந்தனில் உள்ளது இறைமை வேந்தன் விடுதலை நாட்டின் விடுதலைக்கானமுன்னறிவிப்பே! வாழ்த்துகிறேம். வரவேற்கிறேம்,

—பி. எம்; சேவியர்
பதில்முதல்வர்
யாழ்ப்பாணம்;

## துறைமுகக் கூட்டுத்தாபனத்தில் தமிழர் எவரும் நியமிக்கப்படவில்லை

துறைமுகக் கூட்டுத்தாபன இயக்குநர் சபையில் தமிழர் ஒருவர்கூட நியமிக்கப்படவில்லை என்ற உண்மையை பாராளுமன்றத்தில் பருத்தித்துறை பா.உ. க. துரைரத்தினம் சுட்டிக் காட்டியுள்ளார்.

## இலங்கைக்குடியுரிமை பெற்றேர் இதுவரை 68,029 மட்டுமே

1967ம் ஆண்டின் 14ம் இலக்க இலங்கை இந்திய ஒப்பந்தத்தின்கீழ் இதுவரை 68,029 பேருக்கு மட்டுமே இலங்கைக்குடியுரிமைவழங்கப்பட்டுள்ளது. 1964ம் ஆண்டு எழுதப்பட்ட இலங்கை—இந்திய ஒப்பந்தத்தின் 15 ஆண்டு காலக்கெடு 1979ம் ஆண்டுடன் முடிந்துவிட்டது, மேற்படி ஒப்பந்தப்படிஇலங்கை இதுவரை 3 இலட்சம் மலையகத் தமிழருக்குஇலங்கைக் குடியுரிமைவழங்கியிருக்கவேண்டும். ஆனல்68,029பேருக்கு மட்டுமே வழங்கப்பட்டுள்ளது, இன்னும் இரண்டு இலட்சத்து 31 ஆயிரத்து 971 பேருக்கு இலங்கைக் குடியுரிமை வழங்கப்படவேண்டும்.

—1-ம் பக்கத்தொடர்

### 1-11-79 மாத்ருபூமியின் முதற்பக்கச்செய்தித் தலைப்பு

தணிக்கை......

வவுனியாவில் ஹோட்டல் ஒன்றின் உரிமையாளரான இருபத்தெட்டுவயது இளைஞர் ரீ. எம். அபேரத்னவை கடந்த 5ம் திகதி முதல் காணவில்லை, மர்மமான முறையில் மாயமாக மறைந்த இவ்விளைஞனின் சடலம் கடந்த 9ம் திகதி வவுனியாவில் உள்ள வவுனிக்குளத்தினுள் கிடக்கக் காணப்பட்டது. கொடூரமான முறையில் கொலை செய்து. சடலத்தின் கழுத்தில் பாருங்கல் ஒன்றினைக்கட்டி குளத்துள் மூழ்கடிக்கப்பட்டிருக்கிறது'
(மற்றும்கொலை பற்றிய விபரம் 2ம் பக்கம்)

2ம் பக்கச் செய்தி

தணிக்கை

''தமிழர் விடுதலைக் கூட்டணியின் முன்னாள் மூதூர் பிரதிநிதியான தங்கதுரை சிங்களவரை அழிக்கும் பணியில் ஈடுபட்டுள்ளார். இவரின் தலைமைக் கையாள் கந்தப் பொடியன் கதிரவேலு என்னும் பயங்கரக் குற்றவாளி ஆவான்.

''இப்பயங்கர அநியாயகாரன் மட்டும் இதுவரை ஆறு சிங்களவரை கொடூரமாக வதைத்துக் கொலை செய்து இருக்கிறான். இவன் இவ்வாறு கொலை செய்து, சிங்களவரின் பிணங்களை வெருவல், இளிவெட்டித் துறைகளிலுள்ள பயங்கர முதலைகளுக்கு இரையாகப் போட்டுள்ளான்.

3ம் பக்கச்செய்தி

— — — — — — — — —

— — — — — — — — —

— — — — — — — — —

— — — — — — — — —

— — — — — — — — —

— — — — — — — — —

— — — — — — — — —

இதுபற்றி மாண்புமிகு சபா

— — — — — — — — —

நாயகருக்கு மனுச்செய்

— — — — — — — — —

தனர்;

— — —

கடந்த 40 ஆண்டுகளுக்கு மேலாக வாழைச்சேனையில் வாழ்ந்துவரும் சிங்கள மீனவர் குடும்பங்கள்

தணிக்கை

''உயர்மட்ட உத்தியோகத்தர்களும் புலிப்படைகளுக்கும் கழுகுப்படைகளுக்கும் அனுசரணையாகஇருந்து வருகின்றனர். மட்டக்களப்பில் இருந்து அனுராதபுரத்துக்கு கொண்டு செல்லப்பட்ட பயங்கரவாதியான கந்தப்பொடியன் தன்னை விடுவித்துக்கொண்டு கதிர வெளியில் இருக்கிறன். இவனுடன் ஐ. ஆர். சிக்களான ராசநாயகம், ராசரத்தினம், ராசவேல், முருகா, குணபாலன் முதலான பயங்கரவாதிகளும் உள்ளனர், தற்போது அனைவரும் 'கட்டு முறிப்பு' திட்டத்தின் கீழ் உள்ள 'மடு' கொலனியில் வதிகின்றனர். ஏனைய தமிழர்களின் ஒத்துழைப்புடன் பயங்கர ஆயுதங்களைத் தாங்கி மக்களைக் கொடுமைப்படுத்தியும் கொள்ளையடித்தும் வருகின்றனர்.

''பயங்கரவாதத்தை ஒழிக்க அரசாங்கம் எடுக்கும் சில்லறை நடவடிக்கைகள் இவர்களது அட்டகாசத்தை மேன்மேலும் அதிகரிக்கச் செய்துள்ளன. வெகுசீக்கிரம் வடக்கிலும்

— — — — — — — — —

கிழக்கிலும் சிங்களவர்கள்

— — — — — — — —, —

மூர்க்கத்தனமான முறையில்

— — — — — — — — —

அழிக்கப்படுவார்கள்; உண்

— — — — — — — — —

மையை உணர்ந்து அரசு

— — — — — — — — —

தீவிர நடவடிக்கை எடுக்க

— — — — — — — — —

வேண்டும்''

— — —

தணிக்கை

செய்துவிட்டு தனது கிராமத்தில் சுதந்திரமாகத் திரிகிறன், கொலையுண்ட இளைஞரின் வயது 23. அண்மையில் திருமணமானவர். ஏருவூர் மரமுந்திரிகைத் தோட்டக் கூட்டுத்தாபன அதிகாரியான இவரது பெயர் சுதர்மன் சில்வா, வாழைச்சேனைப்பகுதியில் கொடூரமான கொலைகாரர்கள் உலாவுவதாகவும் தான் அங்கு கடமைபுரிய அஞ்சுவதாகவும் திரு; சுதர்மன் சில்வா தனது தந்தையாரிடம் கூறியுள்ளார்.''

— மாத்ரு பூமி (1-11-79)

இப்பத்திரிகை சிலோன் நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டட்டாரால் யாழ்ப்பாணம் மகாத்மா காந்தி வீதி 15ம் இலக்கத்திலுள்ள சுதந்திரன் அச்சகத்தில் 1979ம் ஆண்டு டிசம்பர் மாதம் 26-ம் திகதி புதன்கிழமை அச்சிட்டு வெளியிடப்பட்டது.